தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 10.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். SA 16722/F/2024

திரு.மு.அப்பாஸ், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
சங்கராபுரம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 208.

******

ஆணை

இவ்வாணையம் 06.10.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.பா.சிங்காரவேல், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.ர.பாண்டியன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திருமதி.ச.சசிகலா, தனி வட்டாட்சியர்(நி.எ), மாநில நெடுஞ்சாலைகள் அலகு-4, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர்கள் 10.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு ந.க.அ4/642/2026, நாள் 05.11.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் Tracking Consignment-ன் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. அதன் பின்னர், அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், தான் கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் 2024-ம் ஆண்டு மக்களுடன் முதல்வர் இரண்டாம் கட்டம் (MM2) சிறப்பு முகாம் சங்கராபுரம்

வட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வாரந்தோறும் இரண்டு அல்லது மூன்று முகாம்கள் நடைபெற்றன என்றும் அதில் பொது மக்கள் கொடுத்த பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை 30 நாட்களுக்குள் தீர்வு கண்டு அதற்கான இணையதளத்தில் பதில் அறிக்கையினை பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் நடைபெற்ற மொத்த சிறப்பு முகாம்களில் சுமார் 4135 மனுக்கள் பெறப்பட்டதை 30.11.202-க்குள் கணினி இணையத்தில் பதிவேற்றம் செய்யும் பணி, சட்டம் ஒழுங்கு மற்றும் இதர அலுவலக பணிகளால் மிகவும் பணிசுமை மற்றும் மனஉளைச்சலால் அவதிப்பட்டுள்ளதால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிற்கு பதிலளிக்க இயலவில்லை என்றும், இனிவரும் காலங்களில் இது போன்ற நிகழ்வு நடைபெறாது என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், தான் கடந்த 31.08.2024-ம் தேதி வரையில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை உதவியாளராக பணிபுரிந்து பணிமாறுதல் செய்யப்பட்டதை தொடர்ந்து கடந்த 02.09.2024 முதல் 03.11.2024 முற்பகல் வரையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்த நிலையில் மீண்டும் பணி மாறுதல் செய்யப்பட்டு 04.11.2024 முதல் மண்டல துணை வட்டாட்சியராகவும் பணிபுரிந்து வந்ததாகவும், தான் சங்கராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியராக பணியேற்பதற்கு முன்பு அப்பணியிடம் காலியிடமாக இருந்ததால் 100-க்கும் மேற்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவையில் இருந்துள்ளன என்றும் அதன்பேரில் சிறப்பு கவனம் செலுத்தி அம்மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் சூழல் ஏற்பட்டது என்றும் இதற்கிடையில் வடகிழக்கு பருவமழை, இணையவழி சான்றிதழ்கள், சிறப்பு வீட்டுமனைப்பட்டா வழங்குதல் என தொடர் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், அதன் பின்னர் பணிமாறுதல் செய்யப்பட்டதை தொடர்ந்து அப்பணியிலிருந்து 04.11.2024 முற்பகல் விடுவிக்கப்பட்டதாகவும், தான் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் பணியிடத்தில் குறைத்த காலத்தில் மட்டுமே பணிபுரிந்ததாலும், தான் பணியேற்பதற்கு முன்பு பணியிடம் காலிப்பணியிடமாக இருந்துள்ளதாலும், அக்கால கட்டத்தில் நிலுவையில் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்களின் பேரில் தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டதுடன் இணையவழி சான்றிதழ், வடகிழக்கு பருவமழை, சிறப்பு வீட்டுமனைப்பட்டா வழங்குதல் உள்ளிட்ட அவசர கூடுதல் பணிகளையும் மேற்கொண்டிருந்தமையால் அம்மனுவின் நிலை குறித்து தொடர்ந்து கண்காணிக்க இயலவில்லை என்றும், இனிவரும் காலங்களில் இம்மாதிரி தவறுகள் நடைபெறா வண்ணம் செயல்படுவேன் என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ✓ **ஆணையத்தால் 06.10.2026 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.3,000/-(ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) அபராதம் அப்போதைய**

பொதுத் தகவல் அலுவலருக்கு விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 16.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 16722/F/2024</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சங்கராபுரம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 208.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (23.08.2024 தேதிய),
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (09.10.2024 தேதிய),
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

<u>மனுதாரர்</u>

திரு.மு.அப்பாஸ்,
தெற்குத் தெரு,
முரார் பாளையம்,
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 208.

நகல்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-